[1971 ஜூலை 15

ரெவின்யூ போர்டினை எடுத்து விடுதல்

* 244 வினா—திரு. என். கிட்டப்பா
திரு. கே. டி. கே. தங்கமணி மாண்புமிகு உணவு-வருவாய்த்
திரு. மா. பா. சாரதி
துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு ரெவின்யூ போர்டினை எத்துவிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதுபோல இந்தியாவின் மற்ற மாநிலங்களில் அமைந்துள்ள ரெவின்யூ போர்டுகளை வேறு எந்த மாநிலத்திலாவது எடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றிய முழு விவரங்களையும் சேகரிக்கும்படியாகக் கோரப்பட்டிருக்கிறது. விவரங்கள் வந்தபிறகு அரசு யோசித்து முடிவு எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ரெவின்யூ போர்டு மெம்பர்களாக 4 பேர்கள் இருந்ததை அரசு 6 பேர்களாக உயர்த்தியிருக்கிறதே. ஏற்கனவே ரெவின்யூ போர்டைக் கலைத்துவிடுவதாக அறிவிக்கப்பட்டிருப்பதனால் இதுபற்றி இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாக இறுதியான ஒரு முடிவுக்கு அரசு வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எண்ணிக்கை அதிகப்பட்டிருப்பதன் காரணத்தினால் ரெவின்யூ போர்டு இருப்பது உறுதியாக்கப்பட்டுவிட்டது என்று அர்த்தம் அல்ல. மற்ற மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய விவரங்களை சேகரிக்கச் சொல்லியிருக்கிறோம். அவை எல்லாம் வந்தவுடன் இந்த ரெவின்யூ போர்டை எடுத்த பிறகு சட்டச் சிக்கல் இல்லாமல் எப்படி இதை நடைமுறைப்படுத்தலாம் என்று பார்த்து முடிவு எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : Sir, is it a fact that the Government are having second thoughts now because if the Board of Revenue is completely removed, the insulating force between the Government and the lower-down officers will also be removed? Also, may I know whether the Government after careful re-consideration have come to the view that it is better to be cautious in regard to this matter?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். மாற்றி அமைப்பது என்பதில் எவ்வித கருத்து மாறுபாடும் இல்லை. எவ்வாறு மாற்றி அமைப்பது என்பதுதான் இப்போது பரிசிலிக்கப் பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : ரெவின்யூ போர்டை மாற்றி அமைப்பது சம்பந்தமாக அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறது என்று கூறினார்கள். அது ஏற்கனவே இந்த மன்றத்தில் திட்டவட்டமாக எடுக்கப்படும் என்பதாக

முன் அமைச்சர் ஒருவரால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அது பரிசீலிக்கப்படும் என்கிறபோது எங்கே அதை எடுக்கப்போவதில்லையோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இதுபற்றி அமைச்சர் அவர்கள் தெளிவாக்க உதவுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இதுபற்றிய அரசாங்கத்தின் முடிவை இப்போது சபாநாயகராக உள்ளவர் முன்பு அமைச்சராக இருந்தபோது அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை. சட்டச் சிக்கல் எதுவும் இல்லாமல் எந்தவகையில் மாற்றி அமைப்பது என்பதுதான் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. போர்டைக் கலைப்பதுபற்றி அல்ல, அது ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுவிட்ட விஷயம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ரெவின்யூ போர்டு முதல் மெம்பராக இங்கே அனுபவம் உள்ளவர் நியமிக்கப்படுகிறாரா? அல்லது மத்திய சர்க்காரில் இருந்து வருகிற சீனியர் என்ற முறையில் அமைக்கப்படுகிறாரா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இரண்டு முறையும் உண்டு. சீனியாரிட்டியைப் பார்த்துப் போடுவதும் உண்டு. அனுபவத்தைப் பார்த்துப் போடுவதும் உண்டு.

திரு. கே. என். குமாரசாமி : ரெவின்யூ போர்டு என்பது அந்நியர் ஆட்சியின்போது ஏற்படுத்தப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி செய்துகொண்டிருக்கும் இந்தக் காலத்தில் அதனால் என்ன லாபம் என்று அரசு கருதுகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதனால் எந்தவித லாபமும் இல்லை என்பதன் காரணத்தினால்தான் கலைத்துவிடுவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திப்போடுவதன் காரணமாக அதற்கென்று தனி அதிகாரிகள் போடவேண்டியதாக இருக்கிறது. வருவாய்க் கழகத்தின் கீழே இருக்கிற அதிகாரிகளை அதற்குப் போடுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வருவாய்த்துறை கழகத்திற்கும் மதுவிலக்குக்கும் சம்பந்தம் இல்லை. இதை எக்சைஸ் இலாக்கா கவனிக்கப் போகிறார்கள். ரெவின்யூ இலாக்கா மேற்பார்வை செய்துகொள்வார்கள்.

சென்னை ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலைகள்

*** 245 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரிலுள்ள ஓட்டல்களை ஏ, பி, சி, என்று மூன்று வகைப்படுத்தி அவைகளுக்கு ஏற்ற விலைவாசியினை நிர்ணயிக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த அடிப்படைகளின்மீது ஓட்டல் முதலாளிகள் விலைவாசிபற்றிக் கருதிப் பார்க்குமாறு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.